ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

सदा ते पादाब्जस्मरणनिरतं बक्तमिह मां
सुधांशूत्तंस त्वं त्यजसि यदि जानन्नपि भृशम् ।
कमन्यं वीक्षेऽयं प्रभवति च को वाऽवनकृते
विचिन्त्येदं सर्वं भजसि यदि वैमुख्यमुचितम् ॥ २२ ॥

ஸதா தே பாதாப்ஜஸ்மரணநிரதம் பக்தமிஹ மாம்
ஸுதாம்ஸூத்தம்ஸ த்வம் த்யஜஸி யதி ஜாநந்நபி ப்ருஸம் ।
கமந்யம் வீக்ஷே(அ)யம் ப்ரபவதி ச கோ வா(அ)வநக்ருதே
விசிந்த்யேதம் ஸர்வம் பஜஸி யதி வைமுக்யமுசிதம் ॥

ஹே ஸுதாம்ஸூத்தம்ஸ சந்திரனைச் சிரோபூஷணமாகக் கொண்ட பரமேசுவர! எப்பொழுதும் உமது பாதாரவிந்தங்களை ஸ்மரித்துக்கொண்டிருக்கும் பக்தனை என்னை ஸர்வக்ஞர் என்று பிரஸித்திபெற்ற நீர் இவன் நம்முடையபக்தன் என்று நன்கு அறிந்திருந்தும் பாதுகார்க்காமல் கைவிட்டீரேயானல் நான் வேறு யாரை எதிர்பார்ப்பேன். அப்படி நான் அபேக்ஷித்தாலும் யார்தான் என்னை ரக்ஷிக்கஸமர்த்தர். இந்த விஷயங்களை எல்லாம் நன்கு ஆலோசித்து என் விஷயத்தில் நீர் விமுகராகயிருந்தால் உசிதமாயிருக்கும்.

திங்களால் விளங்கும் ஜடையையுடைய ஹேமஹேச! உம்மை விட்டால் நமக்கு வேறு கதியில்லை என்று திண்ணமான எண்ணத்துடன் இரவும் பகலும் இடைவிடாது உமது சரணங்களையே தியானித்துக்கொண்டு உமது அனுக்ரஹத்தைப் பெற வேண்டுமென்று ஆவலுடன், நான் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதை நீர் அறிந்தும் எனது விருப்பத்தைப் பூர்த்தி செய்யாமல் மௌனமாயிருப்பின் வேறு யாரிடம் நான் செல்வேன். சென்றாலும் அங்கீகரிக்க எவர் இருக்கிறார். உம்மையன்றி வேறு வழியில்லாமல் கஷ்டப்படும் என் விஷயத்தில் தாங்கள் உதாஸீனமாயிருப்பது உசிதமில்லை. அவசியம் ரக்ஷிக்கவேண்டும் என்று ஒரு பக்தர் பகவானிடம் வேண்டுகிறார்.

சுபம்

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
விபவ-ஸூ அற்பிசி-மீ ௨௮

# கிரஹண தத்துவம்.

நாளது விபவஸூ ஐப்பிசிமீ 28உ திங்கட்கிழமையன்று ஸம்பவிக்கும் ஸூரியக் கிரஹணத்தைப் பற்றிய ஸம்சயம் நமது ஆர்யதர்மம் 13-வது புஸ்தகம், 28-வது ஸஞ்சிகையில் வெளியாயிருக்கின்றது. அதில் இவ்வருஷத்திய ஸகல பஞ்சாங்கங்களிலும் பிரதமை வந்த பிறகு கிரஹணஸ்பர்சம் போட்டிருப்பது ஸம்பவிக்குமா? அப்படி சாஸ்திரம் உண்டா? என்று கேழ்க்கப்பட்டிருக்கின்றது. அதற்கு பண்டிட் K. தேவராஜசாஸ்திரிகள் அவர்கள் இரண்டொருவருஷத்திய பஞ்சாங்க ஆதாரத்தைக் கொண்டு பிரதமையிலும் ஸ்பரிசம் ஸம்பவிக்கலாமென்று கூறியிருக்கிறபடி அவ்வருஷத்திய கஞ்சனூர் பஞ்சாங்கத்தில் காணப்படவில்லை என்றும் கூறப்பட்டிருக்கின்றது. 33-வது ஸஞ்சிகையில் D. S. பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களால் கீழ் காட்டிய கேழ்விக்கு பதில் எழுதப்பட்டிருக்கிறது. அதன் சுருக்கம் சிலவருஷங்களில்சில பக்கங்களில் அமாவாஸையிலேயே பிடித்து விடுபடுமென்றும் சில வருஷங்களில் சில பிரதேசங்களில்பிரதமையிலேயே பிடித்து விடுபடுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. அப்படி ஸம்பவிக்க நியாயமுமில்லை, சாஸ்திரமுமில்லை. ஸூரிய ஸித்தாந்தத்தில் 4-வது அத்தியாயமான சந்திரக்ரஹணாதிகாரத்தில் மத்தியக்கிராஸம், ஸ்பரிசம், மோக்ஷம்இவற்றின் காலத்தை,

स्फुटतिथ्यवसाने तु मध्यग्रहणमादिशेत् ।
स्थित्यर्थनाडिकाहीने ग्रासो, मोक्षस्तु संयुते ॥

𑌸𑍍𑌫𑍁𑌟𑌤𑌿𑌥𑍍𑌯𑌵𑌸𑌾𑌨𑍇 𑌤𑍁 𑌮𑌧𑍍𑌯𑌗𑍍𑌰𑌹𑌣𑌮𑌾𑌦𑌿𑌶𑍇𑌤𑍍 ।
𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌨𑌾𑌡𑌿𑌕𑌾𑌹𑍀𑌨𑍇 𑌗𑍍𑌰𑌾𑌸𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑍍𑌤𑍁 𑌸𑌂𑌯𑍁𑌤𑍇 ॥

ஸ்புடமான திதி (அமாவாஸை, பூர்ணிமை) யின் முடிவிற்றான் மத்தியக்கிராஸகாலம், ஸ்தித்யர்த்த நாழிகையை திதியின் முடிவு

காலத்தில் கழித்து வந்த நாழிகையில் ஸ்பரிசமும், ஸ்தித்யர்த்த நாழிகையை திதியின் முடிவுகாலத்தில் கூட்டி வந்த நாழிகையில் மோக்ஷமும் ஏற்படும், என்று கூறியிருக்கிறது. அதாவது சூரிய கிரஹணமானல் அமாவாஸை முடிகிறபோது தான் மத்தியக்கிராஸம் ஸம்பவிக்கும். கிரஹணத்தின் ஆத்யந்த நாழிகையின் பாதியை அமாவாஸைமுடிவில் கழித்துவந்த நாழிகையிற்றான் ஸ்பரிசம் ஸம்பவிக்கும் இதனால் கிரஹணத்தின் ஆத்யந்த நாழிகையின் பாதி எவ்வளவு நாழிகையுண்டோ அவ்வளவு நாழிகை அமையில் பாக்கியிருக்கும்போதே ஸ்பரிசமாய்விடுமென்று எற்படுகின்றது. அவ்விதமாகவே கிரஹணத்தின் ஆத்யந்த நாழிகையின் பாதியை அமையின் முடிவில் கூட்டிவந்த நாழியிற்றான் அதாவது பிரதமை வந்து தான் மோக்ஷம் ஸம்பவிக்கும் என்றும் ஏற்படுகின்றது. இதற்கு முந்தி பிந்தி இவைகள் ஸம்பவிக்கக் கூடாதோவென்ற சங்கையை விலக்குவதற்காகத்தான் கீழ்காட்டியவசனத்தில் து என்று போடப்பட்டிருக்கின்றது. இக்கருத்தை இந்த சுலோகத்தின் வியாக்கியானத்தில்

**तुकारात्पूर्वापरकालनिरासः । स्फुटतिथ्यवसाने तु ।**

**துகாராத் பூர்வாபரகால நிராஸ: ।**

**ஸ்புடதித்யவஸானே து** என்றவிடத்தில் போடப்பட்ட து, என்றபதத்தினல் மத்தியக்ராஸத்திற்குக் குறிப்பிட்ட காலத்திற்கு முந்தி பிந்தியகாலம் விலக்கப்படுகின்றது.

**तुकारः स्पर्शमोक्षस्थित्यर्धाभ्यां स्पर्शमोक्षकालाविति विषय-व्यवस्थार्थकः । मोक्षस्तु संयुते ।**

**துகார: ஸ்பர்ஶமோக்ஷஸ்தித்யர்தாப்யாம் ஸ்பர்ஶமோக்ஷ காலாவிதி விஷயவ்யவஸ்தார்த்தக: । மோக்ஷஸ்து ஸம்யுதே** என்ற இடத்தில் போடப்பட்ட, து, என்ற பதத்தினல் ஸ்பரிச மோக்ஷகாலம் பர்வாந்தத்திற்கு முந்தியும் பிந்தியும்தான் வருமேயல்லாது வேறு காலத்தில் வாாது என்றவிஷய வியவஸ்தை கூறப்படுகின்றது, என்று வியாக்கியாதா கூறுகின்றார். இதனல் அமாவாஸையிலேயும் மோக்ஷம் ஸம்பவிக்குமென்பதும், பிரதமையிலும் ஸ் ப ரி ச ம் ஸம்பவிக்குமென்பதும் ஸூரிய ஸித்தாந்த வசனத்திற்கு விரோதமாயிருக்கிறது. இவ்விதமே ஸித்தாந்த சிரோமணியிலும் சந்திரக்கிரஹணுதி காரத்தில்,

मध्यग्रहः पर्वविरामकाले स्पर्शग्रहोऽस्मात्परतश्च मुक्तिः ।

மத்யக்ரஹ: பர்வவிராமகாலே, ஸ்பர்சக்ரஹோ, ஸ்மாத்பரதச்ச முக்தி: ॥

பர்வம் முடிகிற காலத்திற்றான், மத்தியக்கிராஸம், இதற்கு முந்தி பர்வத்திற்றான் ஸ்பரிசம், இதற்கு (மத்தியக்கிராஸத்திற்குப்)பிந்தி தான் அதாவது பிரதமையில்தான் மோக்ஷம் என்று பாஸ்காராசாரியார் அவர்களும் கூறியிருக்கின்றார்.

ஸூரிய ஸித்தாந்த வியாக்யானத்தில் இதற்கு உபபத்தியும் கூறப்பட்டிருக்கின்றது, ஸித்தாந்த சிரோமணியிலும் கோளாத்தியாயத்தில் க்ரஹணவாஸனுதிகாணத்தில்விரிவாய்உபபத்தி கூறப்பட்டிருக்கின்றது விரிவிற்கஞ்சி விடுத்தோம். ஆகவே ஸூர்யக்கிரஹணத்தில் அமாவாஸையில் தான்ஸ்பரிசம். பிரதமையில்தான் மோக்ஷம். பர்வத்தின் முடிவுதான் பரமக்கிராஸமெனப்படும். மத்தியக்கிராஸம் என்பது தான் நியாயஸித்தமானதென்று சாஸ்திரம் கூறுகின்றது. அப்படியிருக்க இவ்வருஷத்தில் ஸகல பஞ்சாங்கங்களிலும் பிரதமை வந்தபிறகு ஸ்பரிசம் போட்டிருப்பதற்குக் காரணம் யாது? கும்பகோணம் மடத்துப் பஞ்சாங்கத்திலும் அப்படிப் போட்டிருப்பதற்கு என்ன காரணம்? என்றால்மற்றபஞ்சாங்கங்களில் அவ்விதம்போடப்பட்டிருப்பதின் காரணத்தை அவரவர்கள் மூலமாய்த்தான் தெரிந்துகொள்ளவேண்டும். கும்பகோணம் மடத்துப் பஞ்சாங்கத்தில் அவ்விதம் போடப்பட்டிருப்பதற்குக் காரணத்தை இங்குக் கூறுவாம். பூமியானது கோளவடிவமானது. அதைச்சுற்றிலும் மேல் புறத்தில் பிராணிகளெல்லாம் வஸிக்கின்றன. அதில் பூபிருஷ்ட (பூமியின் மேல் புற)த்தில் வஸிக்கும் மனிதர்கள். கிரஹ நக்ஷத்திராதிகளை தாங்களிருந்த இடத்திலிருந்து பார்க்கின்றார்கள்.) திதி முதலியவைகளுக்கு பூபிருஷ்டதிருக்துல்யதை (பூபிருஷ்டத்திலிருந்து பார்க்கும் பார்வைக்கு ஒத்துவருந்தன்மை) வேண்டாமென்றும், பூமத்தியதிருக்துல்யதை (பூமியின் உட்புறத்து நடுமத்தியிலிருந்து ஒருவன் பார்ப்பானேயாகில் அவன் பார்வைக்கு ஒத்துவரும்படியான தன்மை) யே போதுமென்றும் சாஸ்திரஸித்தாந்தம். இது கும்பகோணம் மடத்துப் பஞ்சாங்கத்தின் முதல் பக்கத்திலுள்ள ஸ்ரீ மடத்தின் ஸ்ரீமுகத்தைப் பார்த்தால் நன்கு புலப்படும். ஆக

வே இப்பொழுது பஞ்சாங்கத்தில் போடப்பட்டிருக்கும் திதி முதலியவைகளின் நாழிகை விநாடிகள் பூமத்திய திருக்ஸித்தியை அநுஸரித்ததாகும். அவை கிரஹணத்திற்குப் போதாது. ஆனால் பூபிருஷ்டதிருக்ஸித்தியே கிரஹண காலத்தியதிதிக்கு அவசியமானது. அப்படி ஸ்புடம் செய்த அமாவாஸையின் முடிவு தான் மத்தியக்ராஸ காலமாகும். இந்தக் கருத்தாற்றான் "स्फुटतिथ्यवसाने तु ஸ்புடதித்யவஸானே து" என்ற வசனத்தில்ஸ்புட,என்ற பதம் போடப்பட்டிருக்கிறது. ஸித்தாந்த சிரோமணியிலும் ஸூர்யக்கிரஹணாதிகாரத்தில் லம்பன ஸம்ஸ்காரத்தின் பிரயோஜனத்தைக் கூறுகின்றவிடத்தில்,

तत्संस्कृतः पर्वविराम एवं स्फुटोऽसकृत् स ग्रहमध्यकालः।

தத்ஸம்ஸ்க்ருத: பர்வவிராமஏவம் ஸ்புடோஸக்ருத்ஸ க்ரஹமத்யகால:॥

இவ்விதமாக பூமத்திய திருக்ஸித்திப்படி வந்த பர்வத்தை லம்பன ஸம்ஸ்காரம் செய்தும் அடிக்கடி ஸ்புடம் செய்தும் வந்த பர்வத்தின் முடிவுதான்மத்தியக்கிராஸகாலமாகும் என்று ஸ்பஷ்டமாய்க் கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு உபபத்தி கோளாத்தியாயத்தில் கிரஹணவாஸனையில்

यतः क्ष्मोर्ध्वस्थितो द्रष्टा चन्द्रं पश्यति लम्बितम्।

யத: க்ஷ்மோர்த்வஸ்திதோ த்ரஷ்டா சந்த்ரம் பஶ்யதி லம்பிதம்॥

இது முதலிய அனேக வசனங்களால் கூறப்படுகின்றது. இது நுட்பமான சாஸ்திரார்த்தமானதால் இங்கு கூறப்படவில்லை. அப்படியே இவ்வருஷம் ஐப்பிசி ௴ 28உ யில்வரும் சூரியக்கிரஹணத்திலும் அன்றய தினம் பஞ்சாங்கத்தில் போட்டிருக்கும் அமாவாஸையின் நாழிகை பூமத்தியதிருக்ஸித்திப்படியுள்ளது. அதில் லம்பன ஸம்ஸ்காரம் செய்து பூபிருஷ்டதிருக்ஸித்திப்படி ஸ்புடமான அமாவாஸையின்முடிவுகாலமான 4-மணி 43-நிமிஷத்திற்குத்தான் பரமக்ராஸம் போட்டிருக்கிறது. ஆகவே அதற்கு முந்தியே ஸ்பரிசம் அமாவாஸையிற்றான் ஏற்படுகின்றது. ஆகையால் இவ்வருஷத்திலும் சூரிய கிரஹண ஸ்பரிசம் அமாவாஸையிற்றான் மோக்ஷம் பிரதமையிற்றான். எப்பொழுதும் இப்படித்தான் சாஸ்திரஸித்தாந்தம்.

V. S. வேங்கட்டராமசாஸ்திரிகள்.

---

ப—ர்

# நவராத்ரியில் ராமாயணபாராயணம்.

ஆஸ்திகசிரோமணிகளே !

நம் நாட்டில் ஆஸ்திகர்களாயுள்ள நாம் யாவரும் அனுஷ்டித்துவரும் விருதங்களுள் நவராத்திரி என்பது மோர் விருதமாகும். நவராத்திரி என்ற அவ்வொன்பது தினங்களிலும் விசேஷ பக்தியுடன் லோகமாதாவாகிய தேவியை ஆராதிப்பதும் அத்தேவியைப்பற்றியனவாகிய லலிதோபாக்கியானம், துர்க்காஸப்தசதீ, ஆர்யாத்விசதீ, மூகபஞ்சசதீ முதலான தேவீஸ்தோத்திரங்களேயும் பாராயணம் செய்து வருவதும் பொருந்தும். அவ்வாறிருக்க, நவராத்திரியில் கற்றறிந்த வித்வான்களும் அக்குலங்களிலுதித்தவர்களும்கூட விசேஷமாக ராமாயண பாராயணம் செய்து வருகிறார்கள். சிலர் தங்கள் வீடுகளில் வைதிகர்களைப் பணங்கொடுத்தும் பாராயணம் செய்துவரச் சொல்லுகிறார்கள். இதன் கருத்து யாது ? நவராத்திரிக்கும் ராமாயணத்திற்கும் என்ன ஸம்பந்தம்? கல்விச் செல்வம் நிறைந்த பலவறிஞர்களும் முக்கியமாக இதைத் தொன்று தொட்டுவிடாது நடத்திவருவதால் இவ்வழக்கத்தை அந்த பரம்பரை என எவ்வாறு கூறுவது? ‘இல்லாமல் பிறவாது அள்ளாமல் குறையாது’ என்ற முதுமொழியையொட்டி, தக்க காரணமின்றி, இஃது சிஷ்டாசாரணையிவ் வருவதற்கிடமில்லை. அக்காரணம் யாதாகவிருக்கலாமென்று சற்று இங்கு ஆராய்வோம்.

ராமாயணம் என்பது முக்கியமாக தேவியைப்பற்றியதே. ராமன் யார் ? மஹாவிஷ்ணுவின் அம்சமூர்த்தி அம்மஹாவிஷ்ணுவோ—

एकैव मूर्तिर्बिभिदे चतुर्धा भक्तेच्छयाऽस्याः परदेवतायाः ।
शान्तौ भवानी पुरुषे तु विष्णुः क्रोधे च काली समरे च दुर्गा ॥

𑌏𑌕𑍈𑌵 𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌬𑌿𑌭𑌿𑌦𑍇 𑌚𑌤𑍁𑌰𑍍𑌧𑌾 𑌭𑌕𑍍𑌤𑍇𑌚𑍍𑌛
𑌯𑌾𑌽𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑌰𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑌾𑌃 । 𑌶𑌾𑌨𑍍𑌤𑍌 𑌭𑌵𑌾𑌨𑍀 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇
𑌤𑍁 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑍇 𑌚 𑌕𑌾𑌳𑍀 𑌸𑌮𑌰𑍇 𑌚 𑌦𑍁𑌰𑍍𑌗𑌾 ॥

என்ற விப் புராணச்செய்யுளில் கூறியவாறு ஸாக்ஷாத்பரதேவதையினேர் வடிவமே, அவ்வாறில்லாவிடில் ஸர்வேச்வரன் மோஹினியுருக்கொண்ட திருமாலையணைவாரா ? பூதநாதனை சாஸ்தாவு

மெவ்வாறு உற்பவிப்பார்? உலகத்திற்கு தர்மத்தை நடித்துக்காட்டுவதற்கல்லவா பகவானின் திருவிளையாடல்கள். பெண் வேடம் பூண்டவோர் புருஷனை பகவான் அணைந்தார்; ஓர் மகனையும் பெற்றெடுத்தாரென்றால் அது நீதியா, எவ்வாறு பொருந்தும்? ஸர்வேசன் ஸர்வஜகன் மோஹினியான ஸ்ரீபராசக்தியையல்லவா வேற்றுருவத்துடன் கூடியிருக்கையில் அணைந்தானந்தங் கொண்டார்.

துவாபரயுகத்தில் கிருஷ்ணவதாரத்தில் அறுபதினாயிரம் கோபஸ்திரீகளுடன் பகவான் கிரீடை செய்தாரென்றதை ஸமஞ்சஸப்படுத்திக்கூறவேண்டுமானால் தேவீபாகவதம் முதலிய புராணத்தைப் பார்த்துத் தத்வார்த்தத்தையறியாதார் என் செய்வர்? கிருஷ்ணனுருவெடுத்த பராசக்தி கோபஸ்திரீகளாய்ப் பிறந்துள்ள தன் பரிவாரங்களான யோகினீ கணங்களுடன் செய்த திருவிளையாடலேயல்லவா இஃது.

கீழ்க்கூறிய காரணங்களை முன்னிட்டு இராமன் ஸாக்ஷாத் பரதேவதையே. ஆதலால் ஸாக்ஷாத்தாகத் தன் திருவிளையாடல்களைக் கேட்பதினும் ரூபாந்தரத்தில் நிகழ்ந்த தன் திருவிளையாடல்களைக் கேட்க தேவிக்குமிக்க விருப்பமே. ராமாயணத்தின் உண்மைப் பொருள் என்னவெனில்: —

இராவணனென்பவன் ஓர் மஹா சிவபக்தன்.

बाण-रावण चण्डीश-नन्दि-भृङ्गि-रिटादयः ।
महादेवप्रसादोऽयं सर्वे गृह्णन्तु शाम्भवाः ॥

பாண-ராவண-சண்டீஶ-நந்தி-ப்ருங்கி-ரிடாதய: ।
மஹாதேவப்ரஸாதோऽயம் ஸர்வே க்ருஹ்ணந்து ஶாம்பவா: ॥

என்றசெய்யுளைக்கூறி சிவபக்தர்கள் தினமும் அவனுக்கு சிவோச்சிஷ்டத்தை நிவேதனம் செய்து வருகிறார்கள். முன்னொருக்கால் கைலையில் சிவ பார்வதிகளுக்குள் 'யார் அழகிற் சிறந்தவர்' என்று ஓர் விவாதம் நிகழ்ந்தது, அப்பொழுது சிவன் 'தான் பெண்ணாகவும் தேவியாணாகவும் உருவெடுத்தாலல்லாது மேன்மை தாழ்மையை அறிவது இயலாது என்று கூறினார். பின்பொருக்கால், இராவணன் கைலைசென்று பகவானை ஸேவிக்கையில் அத்திருக்கைலையுடன் ஸர்வேசுவரனைத் தன்பட்டிணத்திற்குக்கொண்டு

சென்று அங்கு வைத்துப் பூஜிக்க வேணும் என்ற எண்ணம் உதித்தது; பகவான் அவ்வெண்ணத்தை மாற்றித் தன்னை மாற்றுருவுடனிருக்கையில் எடுத்துச் செல்லுமாறு ஆணையிட்டார்' அவ்வாணைப்படி அவனும் தன் நகர் சேர்ந்தான். கடவுளும் தன் கூற்றை நிறைவேற்ற ஆயோனிஜையான ஸீதை என்ற உருவம்படைத்தார். ஸ்ரீபார்வதி தேவியும் எல்லோர் மனத்தையும் கவரவல்ல இராமனென்ற உருவம் பெற்றாள்: சிவனிலும் தனக்கு வல்லமை அதிகமென மெய்ப்பிக்கவே சிவதனுசையும் முறித்தாள்.

சிவபெருமானைத் தன் பட்டிணத்தில் வைத்து ஆராதிக்க எண்ணங்கொண்டு வெகுநாட்களாக எதிர்பார்த்திருந்தஇராவணேசுவரனும் ஸீதையென்றுருவுடன் கூடின பரச்சிவத்தைத் தக்க ஸமயத்தில் தூக்கிச் சென்று இலங்கையில் அ சோ க வனத்தில் வைத்துக் காலையும், மாலையும், தரிசித்து அவளை எப்பொழுதும் நினைத்து மனமுருகினன். மூவ்வுலகும் ஜயித்த தசகண்டனுக்கு ஸீதையென்னும் மாதைக்கொண்டுவைக்க உயர்ந்த அரண்மனைகள் இல்லையா! அசோகமென்ற வனந்தானு கிடைத்தது? இதனுண்மைப் பொருளென்ன? சோகமோகாதிகளை வேறுடன் களைந்து

**संसारसागरं दुःखं तरति** ஸம்ஸாரஸாகரம் து꞉க²ம் தரதி ।

என்ற சொற்படி இல்லறக் கடலிற் படுந்துயரம் நீக்கி முக்தியைக் கொடுக்கவல்ல அசோகவனமென்ற திருநாமம் பெற்ற தன்னுடைய வோருபவனந்தான் ஸீதையுருவுடைய சிவத்துக்குறியது என்று நன்கு ஆராய்ந்தே அவ்விராவணன் அவ்வாறு செய்தது'

இராவணனுக்கும் ஸீதைக்கும்தூதனாக இருந்து வந்த ஹனுமார் ஸாக்ஷாத் கைலையிலுள்ள அதிகார நந்தியென்றும் சிவபக்த சிரோமணியே.

**शिवश्शक्त्या युक्तो यदि भवति शक्तः** ஶிவஶ்ஶக்த்யா யுக்தோ யதி ப⁴வதி ஶக்த꞉ ।

என்றதை அனுஸரித்துச் சிவனுக்குத் தனியே ஒரு கார்யஞ்செய்யும் வல்லமையில்லையென்றும் எல்லாம் சக்தியாலேயே நடைபெறவேணுமென்ற காரணம்பற்றியே சிவபெருமான் பதினான்கு வருடம் தன்னை தன்னுபவனத்தில் வைத்தாராதித்ததன் பயனாக

ஸ்ரீராமபிரானென்ற உருக்கொண்ட தேவியால் அவ்விராவண னுக்குப்பரமமுக்தியையளித்து என்றுமழிவில்லாதவனாகச்செய்து தன் கைலையில் நித்யானந்தத்துடன் வஸிக்கச் செய்தார். அவர் இன்னும் பகவத்பக்தர்களில் இரண்டாவனாக விளங்கிவருகிறான். இராமன் காட்டிற்குத் தன்னையழைத்துச செல்லமாட்டேன், அங்கு தன்னைக் காப்பாற்றுவது கஷ்டமென்று, கூறியபொழுது கோபத்துடன் ஸீதை கூறிய

किं त्वाऽमन्यत वैदेहः पिता मे मिथिलाधिपः ।
रामजामातरं प्राप्य स्त्रियं पुरुषविग्रहम् ॥

𑌕𑌿𑌂 𑌤𑍍𑌵𑌾𑌽𑌮𑌨𑍍𑌯𑌤 𑌵𑍈𑌦𑍇𑌹𑌃 𑌪𑌿𑌤𑌾 𑌮𑍇 𑌮𑌿𑌥𑌿𑌲𑌾𑌧𑌿𑌪𑌃 ।
𑌰𑌾𑌮𑌜𑌾𑌮𑌾𑌤𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 ॥

என்றவிச்செய்யுளில் ஆணுருவங்கொண்ட மங்கைக்கு உருவம் பலித்திருப்பினும் ஆண்மை என்பது புருஷருக்கே உறியது. அது ஒரு மாதிடந்தோன்றுமா? தோன்றாதென்பதைக் குறிப் பாகக் காட்டியிருக்கிறது. இதனால் இராமன் ஸ்ரீ பாதேவதை யென்பதை வான்மீகிமஹரிஷியும கோடி காண்பித்திருக்கின்றார், உண்மைப்புருஷனாகவிருப்பின் வான்மீகி கூறுமாறு மனையாளை விட்டுப்பிரியின் இவ்வாறு வாய்விட்டலருவானாவென்பதைச் சற்று ஆலோசியுங்கள். அச்சமயம் கதறிய இராமன் நிலையைக் கூறிய வான்மீகியின் மனம் கல்லோ?

वल्मीकजन्ममुनिरेव कठोरचेता: 𑌵𑌲𑍍𑌮𑍀𑌕𑌜𑌨𑍍𑌮𑌮𑍁𑌨𑌿𑌰𑍇𑌵 𑌕𑌠𑍋𑌰𑌚𑍇𑌤𑌾𑌃

என்றோர் கவி கூறுகிறார். மற்றோர் கவி, அவ்விராமன் நிலைகண்ட கல்லும் கதறும்.

अपि ग्रावा रोदित्यपि दलति वज्रस्य हृदयम् ।

𑌅𑌪𑌿 𑌗𑍍𑌰𑌾𑌵𑌾 𑌰𑍋𑌦𑌿𑌤𑍍𑌯𑌪𑌿 𑌦𑌲𑌤𑌿 𑌵𑌜𑍍𑌰𑌸𑍍𑌯 𑌹𑍃𑌦𑌯𑌮𑍍 ।

என்றுரைக்கிறார். இந்நிலையிலோர் புருஷன் இருந்திருக்கக் கூடுமா? இயலாது.

இதனால் விளங்குவது யாதெனில் ஸ்ரீராமாயணம் தேவியின் திருவிளையாடலே. அதை நவராத்திரிகாலத்திற் பாராயணம் செய்வதும் பொருத்தமுடையது.

சிலர் இராமனைச் சிவனாகவும் ஸீதையைப் பார்வதியாகவும் கூறுகின்றனர். உதாஹரணமாக இப்புத்தகசாலையில் 151-நம்ப

ருள்ள 'ராமப்ரஸாதஸ்தோத்திரம்' என்ற இருநூறு செய்யுள்களடங்கிய கிரந்தத்தில்

उमारूपां सीतां उडुपतिकलानद्धमकुटां
सिताभं त्र्यक्षं त्वां रघुवर शिवं भावयति यः ।
अविच्छिन्नाभोगानयमिह च भोगाननुभवन्
शरीरान्ते शम्भोरपि सुखान्ते विहरति ॥

𑌉𑌮𑌾𑌰𑍂𑌪𑌾𑌂 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌉𑌡𑍁𑌪𑌤𑌿𑌕𑌲𑌾𑌨𑌦𑍍𑌧𑌮𑌕𑍁𑌟𑌾𑌂
𑌸𑌿𑌤𑌾𑌭𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌰𑌘𑍁𑌵𑌰 𑌶𑌿𑌵𑌂 𑌭𑌾𑌵𑌯𑌤𑌿 𑌯𑌃 ।
𑌅𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌾𑌭𑍋𑌗𑌾𑌨𑌯𑌮𑌿𑌹 𑌚 𑌭𑍋𑌗𑌾𑌨𑌨𑍁𑌭𑌵𑌨𑍍
𑌶𑌰𑍀𑌰𑌾𑌨𑍍𑌤𑍇 𑌶𑌮𑍍𑌭𑍋𑌰𑌪𑌿 𑌸𑍁𑌖𑌾𑌨𑍍𑌤𑍇 𑌵𑌿𑌹𑌰𑌤𑌿 ॥

என்றோர் மஹான் கூறியுள்ளார். மற்றொருவர் விஷ்ணுதத்வரஹஸ்யகண்டனமென்ற கிரந்தத்தில்

कृताभिषेकस्स रराज रामः सीताद्वितीयस्सह लक्ष्मणेन ।
कृताभिषेकस्त्वगराजपुत्र्या रुद्रस्स विष्णुर्भगवान्निवेशः ॥

𑌕𑍃𑌤𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑌸𑍍𑌸𑌰𑌰𑌾𑌜 𑌰𑌾𑌮𑌃 𑌸𑍀𑌤𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌸𑍍𑌸𑌹 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍇𑌨 । 𑌕𑍃𑌤𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑌸𑍍𑌤𑍍𑌵𑌗𑌰𑌾𑌜𑌪𑍁𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌸𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌭𑌗𑌵𑌾𑌨𑍍𑌨𑌿𑌵𑍇𑌶𑌃 ॥

என்ற செய்யுளை முக்கிய ஆதாரமாகக்கொண்டு இராமனைச் சிவமாகவே கருதுகிறார். அப்படியிருப்பினும் இராமாயணத்தைப் பாராயணம் செய்வது தகுதியே.

சிலர் தேவியை ஆராதிக்கக் கூடாது. ஸ்திரீ தேவதைகளை ஆராதித்தால் மனங்கெட்டு அழிந்துவிட நேருமென்கிறார்கள். அவர்களையோர் கேள்வி கேட்போம். 'ஒவ்வொரு மனிதனும் தாய், தங்கை, தமக்கை, தோழி, ஊழியக்காரி, மனையாள் இவர்களுடன் பழகுகிறான் ஒவ்வொருவரிடத்திலும் வாத்ஸல்யம், நேசம், தயை, காமம் என்றவாறு இடத்திற்கேற்பமாறுபடும்சொற்றொடருடைய பிரீதியை வைக்கிறான். இந்நிலையில் ஒருவன் தன் தாயைத் தனித்துக் காணநேரின் கூடிக்குலாவிக் களித்திருக்க எண்ணம் யாருக்காவது திக்குமா? ஒருக்காலுமில்லை.

அவ்வாறே லோகமாதாவாகிய ஸ்ரீ பராசக்தியை நினைவிலும் கனவிலும், பாலையாகவோ. யுவதியாகவோ, கிழவியாகவோ எவ்வாறு பார்க்க நேரினும் மனஞ்சலியர்தென்பதற்கையமில்லை.

அப்படியே ஒருவனுடைய மனம் உலகமாதாவைக் கண்டு கலங்கினும் அவள் அவனைக் கெடுத்துவிடுவாளா. ஒருபொழுது மில்லை. "பெற்றமனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்றதும்

कुपुत्रो जायेत क्वचिदपि कुमाता न भवति ।

குபுத்ரோ ஜாயேத க்வசிதபி குமாதா ந பவதி ।

என்றதுமான முதுமொழிகளை அனுஸரித்து ஒருக்கால் நம்மனங் கலங்கினும் உலகமாதாவாகிய ஸ்ரீ பராசக்தி என்னும் மாறுவன்புடன் நம்மைக் கார்ப்பாளென்பதைத் தப்பாமல் கருத்திலிட்டு ஸ்திரீபுமான்கள்எல்லோரும் நவராத்திரிகாலத்தில் தேவியை பக்தியுடனாராதித்து இராமாயணம் முதலியன பாராயணம் செய்தும் தேவியின் அனுக்கிரஹம் பூர்ணமாய் பெருவோமாக.

பண்டித, ரீ. வைத்யநாத சாஸ்திரி
ஸ்வஸ்வதிமஹால் தஞ்சாவூர்.

---

# ஸந்தியாவந்தனம்.

(474-வது பக்கத்தொடர்ச்சி)

श्रेयान्स्वधर्मो विगुणः परधर्मात्स्वनुष्ठितात् ।
स्वधर्मे निधनं श्रेयः परधर्मो भयावहः ॥

ச்ரேயான்ஸ்வதர்மோ விகுண: பரதர்மாத்ஸ்வனுஷ்டிதாத் ।
ஸ்வதர்மே நிதனம் ச்ரேய: பரதர்மோ பயாவஹ: ॥

" தன் வர்ணத்திற்கும், ஆச்ரமத்திற்கும், விதிக்கப்பட்ட கர்மமானது குணமற்றதாயிருப்பினும் அதுதான் மேலானது. தன் ஸ்வதர்மத்தைச் செய்யுங்கால் மாணம நேரிடினும் அதைக் கைவிடலாகாது. பிற தர்மத்தை அனுஷ்டித்தால் அதை விட மஹா அனர்த்தங்களுக்கு ஆளாக வேண்டியிருக்கும். "

ஆகவே சூத்திரர்கள், அவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் திரிவர்ணர்களுக்குப் பரிசர்யை முதலிய தம் தர்மங்களை அனுஷ்டிப்பதால் தம் கடன்களைப் பரிஹரித்துக் கொள்ளுகிறார்கள். ஸந்தியாவந்தனத்தினாலேயே பரிஹரித்துக்கொள்ள வேண்டும் என்று ஏன் ஆக்ரஹம்?

சங்கை:— प्रयोजनमनुद्दिश्य न मन्दोऽपि प्रवर्तते ।

ப்ரயோஜனமனுத்திச்ய ந மந்தோऽபி ப்ரவர்த்ததே ।

எப்பேர்ப்பட்ட மூடனாயினும் யாதொரு பிரயோஜனத்தையும்எதிர்பாராமல் ஒரு காரியத்தில் பிரவேசிக்கமாட்டான் என்ற லோக நியாயத்தாலும் न कुर्यान्निष्फलं कर्म ந குர்யாந்நிஷ்பலம் கர்ம பிரயோஜனமற்ற காரியத்தைச் செய்யக் கூடாது என்ற சுருதியாலும் நிஷ்பலமான காரியத்தைச்செய்யலாகாது என்று தெரிய வருவதால் நிஷ்பலமான ஸந்தியாவந்தனத்தை நாம்செய்யலாமா?

ஸமாதானம்:– ஸந்தியாவந்தனம் முற்றிலும பிரயோஜனமற்றதல்ல. மாம் பழத்திற்காகவென்றே பயிரிடப்பட்ட மாமரம்நிழலேயும் வாஸனையையும் எப்படித் தருகின்றதோ தான்யத்தின்பொருட்டே பயிரிடப்பட்டபோதிலும் நெற்பயிற் எப்படி வைக்கோலைக் கொடுக்கின்றதோ குளிரைப் போக்கடிக்கவேண்டி மூட்டப்பட்ட அக்கினியானது எப்படி பிரகாசத்தைத் தருகின்றதோ அப்படியே பகவானின் ஆக்ஞாரூபமாகக் கருதிச் செய்யப்படும் ஸந்தியாவந்தனமும் முன் கூறப்பட்ட தீர்க்காயுஸ், நல்லஅறிவு, கீர்த்தி முதலிய சிறந்த பயன்களையும் தருகிறது. மேலும

यत्सायमासीनः सन्ध्यामुपास्ते तया वीरस्थानं जयति । यत्प्रात-स्तिष्ठन् तया स्वर्लोकं जयति ।

யத்ஸாயமாஸீந꞉ ஸந்த்யாமுபாஸ்தே தயா வீரஸ்தாநம் ஜயதி । யத்ப்ராதஸ்திஷ்டந் தயா ஸ்வர்லோகம் ஜயதி ।

ஸாயம் ஸந்தியை உட்கார்ந்து செய்வதால் வீர ஸ்வர்க்கத்தை அடைகிறான். பிராதஸ்ஸந்தியை நின்று கொண்டு செய்வதால் ஸ்வர்க்கலோகத்தை அடைகிறான். (ஸ்மிருதி ரத்னாகரத்தில் உதாஹரிக்கப்பட்ட சுருதி)

पूर्वां सन्ध्यां जपं स्तिष्ठन्नैशमेनो व्यपोहति ।
पश्चिमां तु समासीनो मलं हन्ति दिवा कृतम् ॥

பூர்வாம் ஸந்த்யாம் ஜபம் ஸ்திஷ்டந்நைஶமேநோ வ்யபோஹதி ।
பஶ்சிமாம் து ஸமாஸீநோ மலம் ஹந்தி திவா க்ருதம் ॥

பிராதஸ்ஸந்தியாவை நின்றுகொண்டு அனுஷ்டிப்பதால் இரவில் மனஸ்ஸினாலும், வாக்கினாலும், பாதங்களாலும், கைகளாலும், வயிற்றினாலும் செய்யப்பட்ட ஸகல பாபங்களையும் போக்கடித்துக் கொள்கிறான். ஸாயம் ஸந்தியாவை அனுஷ்டிப்பதால் பகலில் செய்யப்படும் ஸகல பாபங்களையும், விலக்கிக்கொள்கிறான்.

மனுஸ்மிருதி. (தொடரும்) M. ராமராவ்,